**பொத்துவில் பிரதேச சபை.**
**அம்பாரை மாவட்டம்.**

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 நிதிக்கூற்றுக்களை சமர்ப்பித்தல்

2018 ம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் 2019 மே 15 ஆந் திகதி கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பில் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் பொழிப்பு அறிக்கை மற்றும் விரிவான முகாமைத்துவ அறிக்கை 2019 மே 31 ஆந் திகதி பிரதேச தவிசாளருக்கு அனுப்பப்பட்டுள்ளது.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் விபரிக்கப்பட்டுள்ள விடயங்களினால் ஏற்படும் தாக்கத்தினை தவிர்த்து பொத்துவில் பிரதேச சபையின் நிதிக்கூற்றுக்களில் 2018 திசெம்பர் 31 இல் நிதிநிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையானதாதும் நியாயமானதுமான நிலையை தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

### (அ) கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) பிரதேச சபையில் காணப்படுகின்ற 34 வாகனங்களில் 30 வாகனங்களின் பெறுமதி மதிப்பீடு செய்யப்பட்டு கணக்குகளில் வெளிப்படுத்த சபையினால் அவசியமான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வாகனங்களின் பெறுமதி மதிப்பிடப்பட்டு நிலையான சொத்தாக கணக்குகளில் வெளிப்படுத்தப்பட வேண்டும். | குறித்த வாகனங்களின் பெறுமதியினை மதீப்பீடு செய்வது தொடர்பாக காணப்படுகின்ற உரிய நடைமுறைகளை பின்பற்றி குறித்த வாகனங்களின் பெறுமதிகள் மதிப்பீடு செய்வதற்கான பொருத்தமான நடவடிக்கைகளை உடன் மேற்கொள்வதுடன். எதிர் வருகின்ற நிதியாண்டில் இவ்வாகனங்களின் பெறுமதிகள் உரிய பதிவினூடாக நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்படும் என்பதனை தங்களின் மேலான கவனத்திற்கு அறியத்தருகின்றேன். |
| (ஆ) சபைக்குச் சொந்தமான காணிகளின் பெறுமதி கணிக்கப்பட்டு கணக்கீட்டிற்கு கொண்டுவரப் பட்டிருக்கவில்லை. | சபைக்குச் சொந்தமான காணிகளின் பெறுமதி கணக்குகளுக்கு நிலையான சொத்தாக கொண்டுவரப்பட வேண்டும். | குறித்த காணிகளின் பெறுமதியினை மதீப்பீடு செய்வதற்கான பொருத்தமான நடவடிக்கைகளை உடன் மேற்கொள்வதுடன். எதிர் வருகின்ற நிதியாண்டில் இக் காணிகளின் பெறுமதிகள் உரிய பதிவினூடாக நிதிககூற்றுக்களில் வெளிப்படுத்தப்படும் என்பதனை தங்களின் மேலான கவனத்திற்கு அறியத்தருகின்றேன். |

## 1.4 இணக்கமின்மைகள்

### 1.4.1 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|---|
| (அ) 1988 ஆம் ஆண்டின் பிரதேச சபைகள் நிதி, நிருவாக விதிகள் | | | |
| (i) பிரிவு 5(12) | பணம்,களஞ்சிய பொருட்கள் மற்றும் காசோலைகளில் கையொப்பமிடல் மற்றும் கையாளல் போன்ற கருமங்கள் மூன்று உத்தியோகத்தர் களுக்கு நிருவாக ரீதியாக ஒப்படைக்கப்பட்டிருந்த போதிலும் மூன்று வருடங்களுக்கு மேலாக அவர்களிடமிருந்து பாதுகாப்பு பிணை பெறப்பட்டிருக்க வில்லை. | பணம், களஞ்சியப் பொருட்கள் மற்றும் காசோலை கையொப்பமிடல் ஆகிய கடமைகள் ஒப்படைக்கப்பட்ட உத்தியோகத்தர் களிடமிருந்து பாதுகாப்பு பிணை பெறப்படல் வேண்டும். | நிர்வாகத்தினரால் பிணைகள் பெறுவதற்கு முற்படுகின்ற வேளையில் சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்கள் குறித்த கடமைகளை செய்ய மறுக்கின்ற சந்தர்ப்பம் உருவாகும் நிலை காணப்படுகறது. எனவே குறித்த நிர்வாகச்சிக்கல் காரணமாக குறித்த உத்தியோகத்தர்களிடம் இருந்து பிணையினை பெற இயலாது உள்ளது. இருந்தபோதிலும் இதற்கான சாத்தியத்தன்மைகளை ஆராய்து குறித்த கருமங்களினை மேற்கொள்ளும் உரிய உத்தியோகத்தர்களிடமிருந்து பாதுகாப்பு பிணை பெறுவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகிறது. |
| (ii) பிரிவு 193 | மீளாய்வாண்டிற்கான உள்ளபடியான வருமானம் மற்றும் செலவு தொடர்பான விபரங்கள் வரவு செலவுத் திட்டத்துடன் ஒப்பிடப்பட்டு முரண்பாட்டுக்கான விளக்கங்களை உள்ளடக்கிய கூற்று தயாரிக்கப்பட்டு கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்பட்டி ருக்கவில்லை. | கூற்றுக்கள் உரிய காலத்தில் தயாரிக்கப்பட்டு கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சபையின் ஒவ்வொரு நிதியாண்டுக்குமான வருமானம் மற்றும் செலவு தொடர்பான விபரங்கள் வரவு செலவுத் திட்டத்துடன் ஒப்பிடப்படுகின்றபோதும், அது தொடர்பான விபரமான கூற்று இனி வரும் காலங்களில் கணக்காய்வுக்குச் சமர்ப்பிக்கப்படும். |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதி பிரமாணம் 571 | 2012 ஆண்டில் வைப்பிலிடப்பட்ட ரூபா 50,000 தொகையான கேள்வி வைப்புக்கள் நிதிப்பிரமாணத்தின் படி கொடுத்து தீர்ப்பதற்கு அல்லது வருமானத்திற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டி ருக்கவில்லை. | நிதிப்பிரமாணத்தி ன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | சுட்டிக்காட்டப்பட்ட கேள்விவைப்பிகான விபரத்தினை ஆராய்ந்து அதனை உரிய நபருக்கு கொடுத்து தீர்ப்பதற்கோ அல்லது வருமானமாக மாற்றுவதற்கோ பொருத்தமான நடவடிக்கைகள் உடன் மேற்கொள்ளப்படுகிறது என்பதனை தங்களுக்கு அறியத்தருகின்றேன் |
| (இ) மாகாண நிதிப் பிரமாண விதி இல. 163.3 | செலுத்தப்பட்ட முற்பணங்கள் அனைத்தும் 10 நாட்களுக்குள் தீர்த்து வைக்கப்பட வேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருந்த போதிலும் 2015 ஆம் ஆண்டில் ரூபா 1,999,908 பெறுமதியான முற்பணங்கள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டி ருக்கவில்லை. | மாகாண நிதிப்பிரமாணத்தி ன் பிரகாரம் முற்பணக் கொடுப்பனவுகள் தீர்க்கப்பட்டு கணக்குகள் சீர்செய்யப்பட வேண்டும். | குறித்த முற்பணமானது அலுவலகத்திற்கான தளபாடக் கொள்வனவிற்காக மத்திய அரசின் அமைச்சு ஊடாக பிராந்திய உள்ளூராட்சி ஆணையாளரின் பணிப்பிற்கமைய வழங்கப்பட்டிருந்தது. ஆனால் இதுவரையில் பல முயற்சிகளை முன்னெடுத்தும் இதற்கான கட்டு நிதி கிடைக்கப்பெறாமை யினால் குறித்த முற்பணமானது தீர்க்கப்படாத நிலையிலுள்ளது. எனவே குறித்த கட்டு நிதியினை பெற்று குறித்த முற்பணத்தினை தீர்ப்பனவு செய்வதற்கான நடவடிக்கைகள் துரிதமாக முன்னெடுக்கப்படும். |
| (ஈ) IAI/2002/02 ஆம் இலக்க 683, 300 2002 நவம்பர் 28 ஆந் திகதிய திறைசேரி சுற்றறிக்கை. | சபையின் கணினிகள், கணினி மென்பொருட்கள் மற்றும் கணினி உதிரிப்பாகங்களினை பதிவதற்கான தனியான பதிவேடுகள் பேணப்பட்டி ருக்கவில்லை. | சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | குறித்த தவறினை சீர் செய்யும் வகையாக கணிணிகள் மற்றும் கணிணி உதிரிப்பாகங்கள்,மென் பொருட்கள் தொடர்பான விபரங்களை பதிவு செவதற்கு பொருத்தமான பதிவேடு ஒன்றினை பேனுவதற்கும், நடை முறைப்படுத்துவதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்படுகிறது. |
| (உ) 2016 மார்ச் 31 ஆம் திகதிய 05/2016 ஆம் இலக்க அரச நிதிச்சுற்றறிக்கை | மீளாய் வாய்வாண்டிற்கான வருடாந்த பொருட் கணிப்பீட்டுச் சபைகளின் சிபாரிசின்படி அழிக்கப்படவேண்டிய நூல்நிலையப் புத்தகங்கள் மற்றும் விற்பனை செய்யப்பட வேண்டிய பொருட்கள் தொடர்பில் 2019 மே 30 ஆம் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்காததுட | அரச நிதிப்பிரமாணம் மற்றும் அரச நிதிச் சுற்றறிக்கையின் பிரகாரம் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | அழிக்கவேண்டியவை, திருத்தம் செய்யப்படவேண்டியவை, விற்பனை செய்யவேண்டியவை போன்றவற்றுக்கான விலைகளை மதிப்பிடுவது தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டபோதிலும் அவை இன்றுவரை முற்றுப்பெறவில்லை. எனவே காலக்கிரமத்தில் பொருட்கணிப்பீட்டு தொடர் நடவடிக்கைகளை உரிய முறையில் செய்து முடிப்பதுடன் மெய்யாய்வு சபையின் அறிக்கையின் பிரதி |

| | | | |
|---|---|---|---|
| | ன் அவ் அறிக்கையின் பிரதி கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்க வில்லை. | | கணக்காய்வாளர் நாயகத்திற்கு சமர்ப்பிப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும். |
| (ஊ) மோட்டார் வாகன போக்கு வரத்துச் சட்டத்தின் பிரிவு 203 | சபையின் பராமரிப்பில் காணப்படுகின்ற 08 வாகனங்களுக்கு மீளாய்வாண்டில் வருமான உத்தரவுப் பத்திரம் பெறப்பட்டிருக்கவில்லை. | உரிய சட்டத்தின் பிரகாரம ஆண்டு தோறும் சகல வாகனங்களுக்கு ம் வாகன வருமான உத்தரவுப் பத்திரம் எடுக்கப்படல் வேண்டும். | நிர்வாகத்தினரின் கவனயீனம் காரணமாக 08 வாகனங்களுக்கான உத்தரவுப் பத்திரம் பெறப்படாது உள்ளது. எனவே குறித்த வாகனங்களினை அடையாளம் கண்டு உடனடியாக உத்தரவுப்பத்திரம் பெறுவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகிறது. |
| (எ) 2008/30 ஆம் இலக்க பொது நிர்வாக சுற்றறிக்கை | ஊழியர் இடர் கடன் வழங்குவதற்கான உயர் எல்லை ரூபா 250,000 ஆக காணப்பட்ட போதிலும் மீளாய்வாண்டில் இவ்எல்லைக்கு மேற்பட்ட வகையில் இரண்டு உத்தியோகத்தர்களுக்கு கடன் வழங்கப்பட்டிருந்தது. | சுற்றறிக்கையை மீறாத வகையில் கடன் வழங்க நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | குறித்த இரண்டு உத்தியோத்தர்களையும் இனங்கண்டு மேலதிகமாக வழங்கப்பட்டிருகன்கின்ற தொகையினை உரிய உத்தியோகத்தர்களிடம் இருந்து அறவீடு செய்வதற்கும் மாதாந்த கழிப்பனவு தொகையினை மாற்றியமைப்பதற்குமான நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. |

## 2. நிதிசார் மீளாய்வு

---

### 2.1 நிதிசார் விளைவுகள்

---

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், 2018 திசெம்பர் 31 ஆந் திகதி முடிவடைந்த ஆண்டிற்கான மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானம் ரூபா. 6,920,147 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொப்பான முன்னைய ஆண்டின் மீண்டுவரும் செலவினத்திலும் கூடிய வருமானம் ரூபா 10,968,249 ஆக இருந்தது.

### 2.2 வருமான நிர்வாகம்

---

#### 2.2.1 மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

---

மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டுகளுக்குரியதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், பட்டியலிடப்பட்ட வருமானம், சேகரிக்கப்பட்ட வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| வருமான விடயம் | 2018 | | | | 2017 | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | மதிப்பிடப் பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | அறவிடப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை | மதிப்பிடப் பட்ட வருமானம் | பட்டியலிடப் பட்ட வருமானம் | அறவிடப் பட்ட வருமானம் | திசெம்பர் 31 இல் திரண்ட நிலுவை |
| | ரூபா’000 | ரூபா’000 | ரூபா’000 | ரூபா’000 | ரூபா’000 | ரூபா’000 | ரூபா’000 | ரூபா’000 |
| (i) வீதவரிகளும் வரிகளும் | 2,005 | - | - | - | - | 3 | 3 | - |
| (ii) வாடகை | 8,420 | 9,143 | 7,965 | 3,693 | 6,256 | 6,455 | 6,168 | 2,515 |
| (iii) உரிமைக் கட்டணம் | 3,380 | 3,234 | 3,234 | - | 2,268 | 2,829 | 2,829 | - |
| (iv) ஏனைய வருமானம் | 28,000 | 27,135 | 24,634 | - | 18,280 | 15,052 | 15,052 | - |
| | 41,805 | 39,512 | 35,833 | 3,693 | 26,804 | 24,339 | 24,052 | 2,515 |

## 2.2.2 வருமான சேகரிப்பின் செயலாற்றல்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர் 31 ஆம் திகதி வரை சபையினால் அறவிடப்பட வேண்டிய வருமானம் ரூபா 43,204 தொகையில் மீளாய்வாண்டில் ரூபா 35,833 தொகை அறவிடப்பட்டிருந்தது. இதன்படி வருமான சேகரிப்பு வீதமானது 83% ஆக காணப்பட்டிருந்தது. | வருமானத்தினை கூடியளவு திரட்டிக் கொள்வதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | பதில் சமர்ப்பிக்கப்படவில்லை. |

## 2.2.3 வீதவரி மற்றும் வரி

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) 2018 ஆம் ஆண்டில் வீதவரிகளும், வரிகளுக்குமான வருமானமாக ரூபா 2,005,000 மதிப்பிடப் பட்டிருந்த போதிலும் 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 134 ஆம் பிரிவிற்கமைய, பிரதேச சபையின் அதிகார எல்லைக்கு உட்பட்ட பிரதேசங்களிலுள்ள 656 வர்த்தக நிலையங்கள் மற்றும் 9,983 வீடுகள் மீது 2003 ஆம் ஆண்டு தொடக்கம் வீத வரிகள் கணிப்பீடு செய்யப்பட்டு அறவிட நடவடிக்கை எடுக்கப்பட் டிருக்கவில்லை. | சபையின் நிர்வாக எல்லைக்குட்பட்ட அபிவிருத்தி யடைந்த பிரதேசங்களை இனங்கண்டு அப்பிரதேசங்களில் சோலைவரி அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படுவதன் மூலம் சபையின் வருமானத்தை அதிகரிக்கலாம். | தற்போது இப்பகுதி அபிவிருத்தியை நோக்கி வளர்ந்துவரும் பகுதிபோல் தென்பட்டாலும் இன்றும் கணிசமானவர்கள் வறியவர்களாகவே உள்ளனர். எனவே பொதுவான ஒரு கொள்கையை பிரகடனப்படுத்தி செயற்படுத்தமுற்பட்டால் அதிகமானவர்கள் பாதிக்கப்படும் நிலையே ஏற்படும். இதனால் வீத வரியினை அறவிடமுடியாமல் உள்ளது என்பதனை தங்களின் மேலான கவனத்திற்கு அறியத்தருகின்றேன். |
| (ஆ) 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 149 ஆம் | சட்டத்தின் பிரகாரம் உரிய வருமானத்தினை | விடுதிகளின் ஆண்டு வருமானம், அவர்களால் சம்பாதித்த இலாபம், அத்தகை விடுதிகள், காணியின் |

| | | |
|---|---|---|
| பிரிவின் பிரகாரம் சபையின் அதிகார பிரதேசத்தில் அமைந்துள்ளதும் சபையில் மீளாய்வாண்டில் பதிவு செய்யப்பட்டதுமான 152 விடுதிகள், உணவுச்சாலைகள் பெற்ற வருமானத்தின் 1 வீதத்தை வரியாக அறவீடு செய்ய மீளாய்வாண்டில் நடவடிக்கை மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | ஆண்டுப் பெறுமதி போன்ற விடயங்களை கணிப்பிடுவதற்கான போதிய பயிற்சிபெற்ற ஆளணியினர் எமது சபையில் காணப்படவில்லை. மற்றும் அவற்றைகோரிப் பெற்றாலும் அவற்றின் உண்மைத்தன்மையை எம்மால் உறுதிப்படத்த முடியாமல் உள்ளது. ஒரே ஒரு வருமானப்பரிசோதகரே எமது சபையில் காணப்படுகின்றார். இதனால் அவற்றை அறவிட முடியாதுள்ளது. |

**2.2.4 வாடகைகள்**

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ)மீளாய்வாண்டின் தொடக்கத்தில் காணப்பட்ட அறவிடப்படவேண்டிய குத்தகை நிலுவை ரூபா 1,778,614 மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 2,806,430 ஆக காணப்படுகின்றமை குத்தகை நிலுவை அறவீட்டில் ஒரு தேக்க நிலையை காட்டுகின்றது. | குத்தகை நிலுவைகள் அறவிடுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். | மீளவும் அறிவுறுத்தல் வழங்கப்பட்டும் நிலுவையானது செலுத்தி முடிக்கப்படாமையினால் காலக்கிரமத்தில் உரிய சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும். |
| (ஆ)மீளாய்வாண்டின் தொடக்கத்தில் காணப்பட்ட அறவிடப்படவேண்டிய கடை வாடகை நிலுவை ரூபா 736,486 மீளாய்வாண்டின் இறுதியில் ரூபா 886,486 ஆக காணப்படுகின்றமை வாடகை நிலுவை அறவீட்டில் ஒரு தேக்க நிலையை காட்டுகின்றது | கடை வாடகை நிலுவைகள் அறவிடுவதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும். | அடையாளங் காணப்பட்ட வாடகை நிலுவைதாரர்களிடம் இருந்து அவற்றை அறவீடு செய்யும் முகமாக மத்தியஸ்த சபை ஊடாக நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதுடன் இயலாத பட்சத்தில் சட்ட நடவடிக்கை எடுப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. |

**2.2.5 முத்திரைக் கட்டணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதி திகதி வரை அறவிடப்படவேண்டிய முத்திரைத் தீர்வை ரூபா 12,802,672 மொத்தமான தொகையில் 22 சதவீதமான ரூபா 2,834,192 நிலுவை தொகை மாத்திரமே அறவிடப்பட்டுள்ளது. | குறித்த தொகையினை விரைவாக அறவிட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | எமது சபைக்குச் சொந்தமான 2016,2017,2018 ஆம் வருடங்களிற்கான முத்திரைத் தீர்வை தொகையினை பெற்றுக் கொள்ள நடவடிக்கை மேற்கொள்ளப்படும. |

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 3 ஆம் பிரிவின் பிரகாரம், பொதுச் சுகாதாரம், பொதுப் பயன்பாட்டு சேவைகள் மற்றும் பொது வழிகள், மற்றும் மக்களின் சுகம், வசதி மற்றும்

நலன்புரி ஆகிய சபையினால் நிறைவேற்றப்பட வேண்டியதாக இருந்த பணிகளை நிறைவேற்றுதல் தொடர்பில் அவதானிக்கப்பட்ட விடயங்கள் பின்வருமாறு.

**(அ) உப விதிகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 1987 ஆம் ஆண்டின் 15 இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126 ஆம் பிரிவின் பிரகாரம், பிரதேச சபையின் வருமானம் மற்றும் ஒழுங்கமைப்புக்காக 20 முக்கிய விடயங்கள் தொடர்பில் உபவிதிகள் தயாரிக்கப்பட்டு அவற்றிக்கான அனுமதியைப் பெற்று நடைமுறைப்படுத்து வதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை. | 1987 ஆம் ஆண்டின் 15 இலக்க பிரதேச சபைகள் அதிகாரச் சட்டத்தின் 126 ஆம் பிரிவின் பிரகாரம், உபவிதிகள் தயாரிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். | பதில் சமர்ப்பிக்கப் படவில்லை |

**(ஆ) செயல் நடவடிக்கைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| விதிக்கப்பட்டிருந்த உப விதிகளின் பிரகாரம் சபையினால் செயல்படுத்தப்பட்டிருக்க வேண்டிய செயற்பாடுகள் தொடர்பில் வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று வருடாவருடம் தயாரிக்கப்பட வேண்டும். | பதில் சமர்ப்பிக்கப் படவில்லை |

**(இ) நிலைபேறான அபிவிருத்தி இலக்குகள்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
| --- | --- | --- |
| 2017 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலங்கை நிலைபெறுதகு அபிவிருத்திச் சட்டத்தின்படி 2030 ஆம் ஆண்டிற்கான ஐக்கிய நாடுகள் சபையின் நிலைபேறான அபிவிருத்தி நிகழ்ச்சி நிரலுடன் இணங்குமாறு ஒவ்வொரு பொது நிறுவனமும் செயற்பட வேண்டும். இருப்பினும் இது தொடர்பிலான இலக்குகளை அடையாளம் கண்டு அதனை அடைவதற்கு சபையினால் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | இலக்குகள் அடையாளங்கண்டு அதனை அளவிடுவதற்கான குறிகாட்டிகளை உருவாக்குவதுடன் அதனை அடைவதற்கு நடவடிக்கை எடுத்தல். | பதில் சமர்ப்பிக்கப் படவில்லை |

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
| --- | --- | --- |
| (அ) பிரதேச சபையில் இயங்கு நிலையில் காணப்படுகின்ற 13 மோட்டார் வாகனங்களில் ஒரு மோட்டார் | சுற்றறிக்கையின் பிரகாரம் சபைக்குச் சொந்தமான | எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப்படவேண்டிய அனைத்து வாகனங்களுக்குமான |

| | | |
|---|---|---|
| வாகனத்தைத் தவிர ஏனைய 12 மோட்டார் வாகனங்கள் தொடர்பில் எரிபொருள் பரிசோதனை மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை. | வாகனங்களை எரிபொருள் பரிசோதனை செய்து பயன்படுத்தப்படல் வேண்டும். | எரிபொருள் பரிசோதனையினை மேற்கொள்வதற்கான உரிய நடவடிக்கைகள் உடன்மேற்கொள்ளப்படுகின்றது. |
| (ஆ) சபையின் எல்லைக்குட்பட்ட பிரதேசங்களில் பிறந்த பிள்ளைகளில் நிறை குறைந்து பிறந்த பிள்ளைகளின் வீதமானது 2015, 2016, 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளில் முறையே 10%, 10.3%, 9.2% மற்றும் 10.6% ஆக காணப்பட்டிருந்தும் 2015 ஆண்டு தொடக்கம் 2019 ஆம் ஆண்டு வரை வரவு செலவுத் திட்டத்தில் தாய் சேய் நலன் மற்றும் சிறுவர் பராமரிப்பிற்கென எந்தவொரு செலவீன ஒதுக்கீடும் ஏற்படுத்தப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த பாதீடு தயாரிப்பின் பிரதேச ரீதியான மக்களின் நலன்களும் கருத்தில் கொள்ளப் படல் வேண்டும். | இவ்வாறான நிறை குறைந்த குழந்தைகளின் விகிதாசார அறிக்கையினை கருத்தில் கொண்டு எதிர்வரும் காலங்களில் இவ்விடயம் தொடாபாக கூடிய கவனம் செலுத்தப்படும் என தங்களுக்கு அறியத்தருகின்றேன். |

## 3.3 மனிதவள முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ) முகாமைத்துவ உதவியாளர்கள், வருமான பரிசோதகர் மற்றும் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் போன்ற பதவி வெற்றிடங்களை நிரப்பத் தவறியமை காரணமாக சபையின் முகாமைக் கருமங்களை முன்னெடுத்தல் மற்றும் சபைக்குரிய வருமானங்களை சேகரித்தல் போன்ற பணிகளை மேற்கொள்வதில் சிரமங்களை எதிர் நோக்கின்றமை கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டது. | வெற்றிடங்களை நிரப்புவது தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | குறித்த வெற்றிடங்களை நிரப்புவதற்கான முயற்சிகளை தொடர்சியாக முன்னெடுத்தவாறே உள்ளோம் என்பதை தங்களின் மேலான கவனத்திற்கு அறியத்தருகின்றேன். |
| (ஆ) மீளாய்வாண்டிலும் அதனைத் தொடர்ந்தும் இடம்பெற்ற ஊழியர்களின் இடமாற்றங்கள் மற்றும் வேலைகளை அவ்வப்போது சுழற்சியடிப்படையில் பகிர்ந்தளிக்காமை காரணமாக அலுவலக கடமைகளை மேற்கொள்வதிலும் தேவையான தகவல்களை வழங்குவதிலும் பின்னடைவு காணப்படுகின்றது. | அலுவலகக் கடமைகளானது முறையாக பகிர்ந்தளிக்கப் படல் வேண்டும். | பதில் சமர்ப்பிக்கப் படவில்லை |
| (இ) பொது நிர்வாக சுற்றறிக்கை PAC06/2006 இன் பிரகாரம் 06 நூலக உதவியாளர் மற்றும் 08 சுகாதார பணியாளர்களை சபை நியமனம் செய்துள்ள போதிலும் இப் பதவியணிக்கான அங்கீகாரத்தை (Cadre Approval) பெறப்பட்டிருக்க வில்லை. | உரிய நடவடிக்கைகள் எடுக்கப்படல் வேண்டும். | பதில் சமர்ப்பிக்கப் படவில்லை |
| (ஈ) ஊழியர் கடன் தொடர்பில் ஊழியர்களிடமிருந்து மேலதிகமாக அறவிடப்பட்ட தொகைகளானது 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டுகளின் | மேலதிகமாக அறவிடப்பட்ட தொகைகளை | மேலதிகமாக அறவீடு செய்யப்பட்ட தொகைகளை அடையாளம் கண்டு |

| | | |
|---|---|---|
| இறுதியில் முறையே ரூபா 55,765 மற்றும் ரூபா 100,420 காணப்பட்ட போதிலும், இத்தொகைகள் மீளச்செலுத்தப்படாமல் காணப்பட்டன. | உரிய உத்தியோகத்தர் களிற்கு மீளச்செலுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | அவற்றினை உரிய உத்தியோகத்தர்களுக்கு மீள செலுத்துவதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும் |
| (உ) 18 ஊழியர்களின் கடன் நிலுவை ரூபா 559,552 ஆனது 02 வருடங்களுக்கு மேலாக அறவிடப்படாது இருந்தன. இந் நிலுவை தொகையினை பிணையாளர்களிடமிருந்து அறவிடுவதற்கோ அல்லது அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுப்பதற்கோ 2019 மே 30 ஆம் திகதி வரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | ஊழியர் கடன் நிலுவைகளை அறவிடுவதற்கு அல்லது அவர்களிற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | அவற்றை கூடிய விரையில் சேகரித்துக்கொள்வதற்கும் முடியாத விடத்து சட்டநடவடிக்கை எடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. |
| (ஊ) ஒரு உத்தியோகத்தருக்கு வழங்குவதற்காக 2009 ஆம் அண்டில் பெறப்பட்ட ஓய்வூதிய பணிக்கொடை ரூபா 103,747 இன்று வரை அவ் உத்தியோகத்தருக்கு கொடுத்து தீர்க்கப்பட்டிருக்கவில்லை. | ஊழியரின் பணிக் கொடையை கொடுத்துத் தீர்ப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | உரிய நடவடிக்கைகள் உடன் முன்னெடுக்கப் படுகிறது. |

## 3.4 சொத்துக்கள் முகாமைத்துவம்

### 3.4.1 உரிமம் மாற்றப்படாத சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்புகள் | பரிந்துரைகள் | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரைகள் |
|---|---|---|
| (அ)ஏனைய நிறுவனங்களிட மிருந்து நன்கொடையாக பெற்றுக்கொள்ளப்பட்ட 08 வாகனங்கள் சபையினால் பயன்படுத்தப்பட்டு வருகின்ற போதும் அவற்றை சபையின் பெயருக்கு உரிமை மாற்றம் செய்ய மீளாய்வாண்டின் இறுதிவரை நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்க வில்லை. | சபையின் வாகனங்களை சபையின் பெயருக்கு உரிமமம் மாற்றுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | இவற்றின் உரிமைகளை மாற்றிப்பெறுவதற்கான நடவடிக்கைகளை மிகவும் துரிதகதியில் முடித்துத் கொள்ளத்திட்டமிட்டுள்ளோம். |
| (ஆ) சபையின் அதிகாரத்திற்குற்பட்ட பகுதிகளிலுள்ள சபைக்குச் சொந்தமான 46 காணிகள் மீளாய்வாண்டு இறுதிவரை சபையின் பெயரிற்கு உரிமை மாற்றம் செய்யப்பட்டிருக்க வில்லை. | சபைக்குச் சொந்தமான காணிகளை முடிக்குரிய காணிக் கட்டளைச் சட்டத்தின் பிரகாரம் பாரதீனப் படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும் | குறித்த காணிகளை அடையாளங்கண்டு அவற்றுக்கான ஆவணங்களை முதலில் பரிசீலனை செய்து. அவற்றின் உரிமையினை சட்ட ஏற்பாடுகளுக்கு அமைவாக சபையின் பெயரிற்கு மாற்றம் செய்வதற்கு துரிதமாக ஏற்பாடுகள் உடன் மேற்கொள்ளப்படுகிறது. |

### 3.4.2 பராமரிப்பு மற்றும் திருத்தங்களினை மேற்கொள்ளத் தவறியமை

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையில் காணப்படும் 06 உழவு இயந்திரங்கள், 02 இலுவை நீர்க்கொள்கலன்கள், 02 மோட்டார் சைக்கிள்கள், 02 இலுவைப்பெட்டிகள் மற்றும் ஒரு கெப் வண்டி என்பன பயன்படுத்தப்படாது காணப்பட்ட போதிலும் அவற்றை திருத்தி பயன்படுத்துவதற்கோ அல்லது ஏலத்தில் விற்பனை செய்வதற்கோ நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வாகனங்களை திருத்தி மீளப் பயன்படுத்து வதற்கான அல்லது ஏலத்தில் விடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | கணக்காய்வு ஆலோசனைக்கு அமைய பயன்படுத்தப்படாது காணப்படும் நிலையான சொத்துக்களை அடையாளம் கண்டு அவற்றினை திருத்தம் செய்து பயன் படுத்துவதற்கும் .இயலாதவற்றை ஏலத்தில் விற்பனை செய்வதற்குமான நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. |

### 3.4.3 வருடாந்த பொருள் / இருப்பு மெய்மையாய்வு

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| 2018 ஆம் ஆண்டின் இருப்புக் கணக்கெடுப்பின் போது சபையில் பற்றாக்குறையாகக் காணப்பட்ட 40 கதிரைகள், 09 கோடரிகள், 30 மண்வெட்டிகள் மற்றும் 09 பிக்காசுகள் தொடர்பாக இருப்புக் கணக்கெடுப்புச் சபையினால் சுட்டிக்காட்டப்பட்டிருந்த போதிலும், அவை தொடர்பாக உரிய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை. | வருடாந்த பொருள் / இருப்பு மெய்மையாய்வுச் சபையின் பரிந்துரைக்கமைய அரசாங்க நிதிப்பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | பொருட்கணிப்பீட்டின் பிரகாரம் சுட்டிக்காட்டப்பட்ட பொருட்பற்றாக்குறை தொடர்பாக பொருத்தமான நடவடிக்கைகள் காலக்கிரமத்தில் முன்னெடுக்கப்படும் என்பதனை தங்களின் மேலான கவனத்திற்கு அறியத்தருகின்றேன் |

### 3.4.4 விளைவற்ற/ குறைப்பயன்பாடுடைய சொத்துக்கள்

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| சபையின் வருமானத்தை அதிகரித்தல் மற்றும் தொழில் வாய்பை வழங்கும் நோக்குடன் 2008 ஆம் ஆண்டு உலக தரிசன நிறுவனத்தின் ரூபா 1,231,600 நிதியையும் 2011 ஆம் ஆண்டு சபையின் ரூபா 1,612,127 நிதியையும் பயன்படுத்தி காகித மீள்சுழற்சி நிலையம் நிர்மாணிக்கப்பட்ட போதிலும், இன்று வரை பயன்படுத்தப்படாமையால் அழிவுற்ற நிலையில் காணப்படுகின்றது. | குறித்த சொத்தினை உரிய தேவைக்கு பயன்படுத்துவத ற்கான நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | இது தொடர்பாக மீதி வேலைகளை முடித்துத் தருமாறும், அதற்கான ஊழியர்களுக்கு பயிற்சி மற்றும் ஏனைய உதவிகளை வழங்குமாறும் உலகதரிசன நிறுவனத்திற்கு அப்போதே அறிவித்திருந்தோம் இன்றுவரை அவர்கள் எந்தவிமான பதில்களையும் எமக்கு அனுப்பவில்லை. மற்றும் அதை இயக்குவதில் பல சிக்கல்கள் காணப்படுகின்றது. அவையாவன போதிய மின்சாரம் அந்த வீதியில் இல்லை, பயிற்றப்பட்ட ஆளணியினர் இல்லை, தற்போது அங்கு பொருத்தப்பட்டுள்ள உபகரணங்களும் பாவிக்கமுடியாதநிலையில் தற்போது துருப்பிடித்து பழுதடைந்துவிட்டது எனவே இவற்றை விற்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. என்பதனை தங்களின் மேலான கவனத்திற்கு அறியத்தருகின்றோம். |

**3.5 பெறுகை**

**3.5.1 பெறுகைத் திட்டம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| தேசிய பாதீட்டுத் திணைக்களத்தின் 128 ஆம் இலக்க 2006 மார்ச் 24 ஆம் திகதிய சுற்றறிக்கையின் பிரகாரம் மீளாய்வாண்டிற்கான பெறுகை திட்டம் சபையினால் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை. | பெறுகைத் திட்டமானது வருடாவருடம் தயாரிக்கப்படல் வேண்டும். | பெறுகைத்திட்டம் தொடர்பான அறிவுறுத்தல்கள், தொடர்பான சுற்று நிருபங்கள் போன்றவற்றினை ஆராய்ந்து அதனைத் தழுவியதாக எதிர்வரும் காலங்களில் பெறுகைத் திட்டமொன்றை தயாரிப்பதற்கான நடவடிக்கைகள் சபையினால் மேற்கொள்ளப்பட வுள்ளது. |

**3.5.2 ஒப்பந்த நிர்வாகம்**

| கணக்காய்வு அவதானிப்பு | பரிந்துரை | கணக்கீட்டு உத்தியோகத்தரின் கருத்துரை |
|---|---|---|
| (அ) செங்காமம் வீதிக்கு கொங்கிரீட் இடல் வேலையின் விடய இல. 07 வீதியின் இரு மருங்கிலும் கிறவல் இட்டு பதனிடுவதற்காக ரூபா 38,666 தொகை 2018 நவம்பர் 30 ஆம் திகதி வேலை முடிவடைந்ததாக கொடுப்பனவுக்காக அனுமதிக்கப்பட்டிருந்த. இருப்பினும் 2019 மார்ச் 15 ஆம் திகதிய களப்பரிசோதனை மேற்கொள்ளப்பட்ட போது வீதியின் வலது பக்கம் பதனிடப்பட்ட கிறவல் மண் முற்றாக வழிந்தோடிக் காணப்பட்டது. | ஒப்பந்த நியதியின் பிரகாரம் பாதையின் இருமருங்கிலும் கிறவலிடப்பட்டு பதனிட நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். | விடய இலக்கம் 7இல் 2018 டிசம்பர் மாதம், 2019 ஜனவரி மாதங்களில் எற்பட்ட பெரும்மழை வெள்ளம் காரணமாக பாதையின் வலப்புறம் இடப்பட்ட கிறவலின் ஒரு பகுதி வெள்ளத்தினால் அடித்துச் செல்லப்பட்டுள்ளது. உரிய வேலைத்திட்டத்திற்கான பிடிகாசு வழங்குவதற்கு முன்பாக இக்குறைபாடு முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டு பிடிகாசியினை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதனை தயவுடன் அறியத்தருகின்றோம். |